



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு துறை அமைச்சர் எஸ்.இரகுபதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றி ஆலோசனை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாவட்ட கழக நிர்வாகிகள் அ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன், அடைக்கலம், ரீதேவி அண்ணாத்துரை, ஜெ.அபுதாஹீர், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் உள்ளனர்.



தேனி மாவட்டம் ராஜதானி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், (07.09.2023) அன்று ரூ.60 இலட்சம் மதிப்பிலான புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செவிலியர் கட்டடம் மற்றும் துணை சுகாதார நிலைய கட்டடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் என்.இராமகிருஷ்ணன், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன் ஆகியோர் முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

### அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் முன்னிலை. சிவகங்கை மாவட்டத்தில்

# மருத்துவ துறையின் புதிய கட்டடங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்

சிவகங்கை. செப்.10-

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா பிரான்மலையில் ரூபாய் 50 லட்சத்தில் கட்டப்பட்ட பொது சுகாதார அலகு கட்டிடம், சிங்கம்புணரி தாலுகா மல்லாக்கோட்டையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 10 லட்சத்தில் கட்டப்பட்ட ஆய்வக கூடுதல் கட்டிடம், திருப்புவனம் தாலுகா பூவந்தியில் ரூபாய் 17லட்சத்தில் துணை செவிலியர் மற்றும் பயிற்சிகட்டிடம் கூடுதல் விடுதிகள், இளையான்குடி ஊராட்சி முனை வென்றியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 25லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள செவிலியர் விடுதி ஆகிய நான்கு கட்டட புதிய கட்டடங்கள் ரூபாய் ஒரு கோடியே 2 லட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்த புதிய கட்டிடங்களின் திறப்பு விழா பிரான்மலை யில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் முன்னிலையில் நடைபெற்றது.

புதிய கட்டிடங்களை திறந்து வைத்து மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசியதாவது.

தமிழக முதல்வராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் குறிப்பாக குக்கிராமங்கள் வரை மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி மருத்துவ வசதிகள் செய்து தரப்பட்டு வருகிறது. அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் ரூபாய் 20 கோடியில் 500 படுக்கையில் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடமும், ரூபாய் 10=50 கோடியில் மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு கட்டிடமும், லட்சத்தில் திருப்பத்தூரில் அரசு மருத்துவமனையில் ரூபாய் 4.34கோடியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டிடமும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூபாய் 50 லட்சத்தில் மானாமதுரை தாலுகா முத்தனேந்தலில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் ,ரூபாய் 80 லட்சத்தில் சிவகங்கை நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் ,ரூபாய் 75 லட்சத்தில் காரைக்குடி செஞ்சையில் நகர்புற ஆரம்ப சுகாதார கட்டிடம், முத்துப்பட்டினத்தில் ரூபாய் 75 லட்சத்தில் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம், தேவகோட்டையில் ரூபாய் 75 லட்சத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம், மற்றும் துணை சுகாதார நிலையங்கள் மாரநாடு, புலியால், ஆகிய வெற்றி ரூபாய் 30 லட்சத்தில் புதிய கட்டிடங்கள் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டத்தில் சுகாதாரம் மற்றும் மருத்துவத்தின் சார்பில் ஒரு கோடியே 40 லட்சத்தில் 6 துணை சுகாதார நிலையங்கள், காரைக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவர்கள் ரூபாய் 10 கோடியே 75 லட்சத்தில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் பராமரிப்பு கட்டிடம், சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரியில் மேம்படுத்தப்பட்ட தமிழர் சிகிச்சை மையம் ஆகியவை திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. தேசிய தர உறுதி நிர்ணய திட்டத்தின் கீழ் தமிழகம் இதுவரை 478 விருதுகள் பெற்றுள்ளது. அதில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையும் ,எம் சூரக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், எம் புதுப்பட்டி சமுதாய சுகாதார நிலையம், ஆகியவை மூன்றும் விருது பெற்றது பாராட்டுக்குரியதாகும்.

மகப்பேறு துறை கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் தமிழகம் இதுவரை 77 சான்றிதழ்கள் பெற்றுள்ளது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி, காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ஆகிய இரண்டும் சான்றிதழ் பெற்றுள்ளது. மாநிலத்தில் முதல்வர் அறிவித்த 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு கடந்த6=6= 23தேதியில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி காரைக்குடி நகராட்சியில் இரண்டும், சிவகங்கை தேவகோட்டை நகராட்சியில் தலா ஒன்றும் ஆகிய புதிய அரசு ஆரம்ப சுகா நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டது.

இது தவிர மானாமதுரை கிருஷ்ணராஜ புரம் காலணியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார ரூபாய் ஒரு கோடியே 20 லட்சத்திலும், காரைக்குடி சங்கராபுரத்தில் ரூபாய்1கோடியே20 லட்சத்திலும் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டத்தில் 1,84,093 பயனாளிகளும் தொடர் சிகிச்சையில் 4,39 ,104 பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள். முதல்வர் அவர்களால் ஜூன் மாதம் துவங்கப்பட்ட புதிய திட்டமான இதயம் காப்போம் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் மாரடைப்பு மற்றும் இதயம் சம்பந்தமான அறிகுறி இருந்தால் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாநிலையங்கள், துணை ஆரம்ப சுகாதாரநிலை யங்களில் சென்று சிகிச்சை பெறலாம். இதற்காக மூன்று வகையிலான 14 மாத்திரைகள் அடங்கிய பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை சிவகங்கை மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் 1810 பேர் கிராமப்புற அளவில் பயன்பெற்றுள்ளார்கள் மேலும் அந்தந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் துணை நிலையங்களில் பாம்பு, நாய் கடிகள் சிகிச்சை க்கான மருந்துகளும் கையிருப்பில் உள்ளது.

எனவே பொதுமக்கள் அருகில் உள்ள அரசு மருத்துவ ம னைக்கு சென்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதல்வர் அவர்கள் இந்தியாவி லேயே தமிழகம் மருத்துவத்துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று உத்திரவிட்டுள்ளார்.அதன்படி மாநிலத்தில் மருத்துவ துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசினார்.

நிகழ்ச்சியில் 20 கர்ப்பிணி களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகள் ,10 பயனாளிகளுக்கு மக்களைத்தேடியருத்துவ பெட்டகம்,10 பயனாளி களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அடையாள அட்டை ஆகியவற்றை அமைச்சர் மா.சுப்பிரமணியண் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கார்த்திக்ப சிதம்பரம் எம்.பி. எஸ் .மாங்குடி எம்.எல்.ஏ திட்ட இயக்குனர் ராமசிவராமன், சுகாதாரத்துறை துணை இயக்குனர் விஜயசந்திரன் திருபுவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன், ஒன்றிய கவுன்சிலர் கலைச்செல்வி, ஊராட்சி மன்ற தலைவர் ராமசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

### சென்னை மாநகரில் வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக

# மழைநீர் வடிகாலில் தூர் வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கே.என். நேரு வலியுறுத்தல்!

சென்னை,செப்.10-

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (07.09.2023) சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம், கண்ணன் கோட்டை தேர்வாய்கண்டிகை மற்றும் வீராணம் ஆகிய ஏரிகளிலிருந்தும், மீஞ்சூர், நெம்மேலியில் செயல்பட்டுவரும் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலமும் நாளொன்றுக்கு 1000 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 85 இலட்சம் பொதுமக்கள் பயன் பெற்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சீரான முறையில் பொதுமக்களுக்கு தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் நிறைவு கட்டப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் 21.08.2023 அன்று பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக கழிவுநீர் குழாய் வழித்தடங்களில் தூர் வாரும் பணிகளும், கசடுகள் அகற்றும் பணிகளும் மேற்கொள்ளப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்யவேண்டும். தூர்வாரும் பணிகள் அனைத்தும் உரிய பாதுகாப்பு உபகரணங்களோடு இயந்திரங்களைக் கொண்டு மட்டுமே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், 2011ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான மணலி, மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகளும், பாதாள சாக்கடை திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்திட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும், மழைநீர் வடிகால் பணிகளின் இணைப்புப் பணிகளையும் விரைந்து முடித்திட வேண்டும். நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகளையும், மழைநீர் வடிகாலில் தூர்வாரும் பணிகளையும், நீர்நிலைகளை தூர்வாரும் பணிகளையும், வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடித்திட வேண்டும். மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் கண்டிப்பாக உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு எவ்வித நெருக்கடியுமின்றி பணிகளை செய்திட வேண்டும். வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

மழைநீர் வடிகால் மற்றும் பாதாள சாக்கடை உள்ளிட்ட சேவைத் துறைகளால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக மேற்கொள்ளப்படும் சாலை வெட்டுக்களை பணிகள் முடிவுற்றவுடன் உடனடியாக சீரமைத்திட வேண்டும். நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, மின் துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில், உள்ளிட்ட தொடர்புடைய சேவைத் துறைகளுடன் ஒருங்கிணைந்து திட்டப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக்கூட்டத்தில் மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ.இராதாகிருஷ்ணன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர், மண்டலக் குழுத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், கூடுதல்/ இணை/துணை ஆணையர்கள், சென்னை குடிநீர் வாரியத்தின் செயல் இயக்குநர், நிதி இயக்குநர், பொறியியல் இயக்குநர், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், பகுதி அலுவலர்கள், பகுதிப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### குவைத்தில் ரூ 60 ஆயிரம் சம்பளம் என்ற போலி அறிவிப்பை நம்பி சென்று சித்திரவதைக்கு ஆளான

# 19 தமிழர்களைதமிழக அரசு இந்திய தூதரகம் மூலம் மீட்பு!

## சென்னைக்கு வந்தவர்களை அமைச்சர் செஞ்சிமஸ்தான் வரவேற்றார்

சென்னை செப்.10-

குவைத்தில் ரூபாய் 60 ஆயிரம் சம்பளம் உணவு மற்றும் தங்குமிடம் இலவசம் என்ற போலி அறிவிப்பை நம்பி வேலைக்கு சென்ற 19 தமிழக இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர் தமிழக அரசின் நடவடிக்கையால் அவர்கள் மீட்கப்பட்டு சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சென்னையில் உள்ள தனியார் டிராவல்ஸ் நிறுவனம் ஒன்று கடந்த ஆண்டு வெளிநாட்டு வேலைக்கு இளைஞர்கள் தேவை மாதம் ரூபாய் 60 ஆயிரம் வரை சம்பளம், உணவு, தங்குமிடம் இலவசம் மற்றும் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று அறிவிப்பு செய்தனர். இதை நம்பி தமிழ்நாட்டில் உள்ள அரியலூர், திருவாரூர், தஞ்சாவூர் ,பெரம்பலூர், கடலூர் ,ராமநாதபுரம் ,சிவகங்கை, மதுரை ,தென்காசி, கள்ளக்குறிச்சி, உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 19 இளைஞர்கள் சம்பந்தப்பட்ட தனியார் டிராவல்ஸ் நிறுவனத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்தனர். இதற்காக அந்நிறுவனம் அந்த இளைஞர்களிடம் ரூபாய் 1 லட்சம் முதல் 1.50 லட்சம் வரை வசூலித்து கடந்த ஆண்டு மே மாதம் சென்னையில் இருந்து விமான மூலம் குவைத்துக்கு அனுப்பி வைத்தனர்.

குவைத் விமான நிலையத்தில் சில ஏஜென்ட்கள் இவர்களை வரவேற்று சில நிறுவனங்களில் பணியில் அமர்த்தினர் அங்கு இவர்களுக்கு பேசியபடி சம்பளம் கொடுக்காமல் ரூபாய் 18000 மட்டுமே மாத சம்பளமாக கொடுத்துள்ளனர். இதனால் சொந்த ஊருக்கு திரும்ப நினைத்தவர்களை சித்திரவதை செய்தனர். இதை அடுத்து அந்த இளைஞர்கள் குவைத்தில் உள்ள இந்திய தூதரகம் அலுவலகத்தில் புகார் செய்தனர் அதோடு தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கும் புகார் அனுப்பி வைத்தனர் .இதையடுத்து தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின் பெயரில் தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலத்துறை குவைத்தில் உள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து 19 தமிழக இளைஞர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன்படி மீட்க்கப்பட்ட 19 தமிழக இளைஞர்களும் இந்திய தூதரகம் உதவியுடன் ஏர் இந்தியா பயணிகள் விமான மூலம் நேற்று முன்தினம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சென்னை விமான நிலையத்தில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களை வரவேற்றார் இதை அடுத்து அந்த இளைஞர்கள் அனைவரும் அவர்களுடைய சொந்த ஊருக்கு தமிழக அரசு சார்பில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அப்போது சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் செய்தியாளர்களிடம் கூறுகையில் :

தமிழ்நாட்டில் உள்ள நமது இளைஞர்கள் தமிழ்நாடு அயலக தமிழர் நலத்துறையில் முறையாக பதிவு செய்துவிட்டு வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்ல வேண்டும் வேலைவாய்ப்பு பற்றி கூறும் நிறுவனம் பற்றி முறையாக விசாரிக்காமல் சென்று இதேபோல் சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாம் என்றும் போலி வாக்குறுதிகளை கொடுத்து ஏமாற்றிய திருச்சியைச் சேர்ந்த இரண்டு இடைத்தார்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அதோடு இல்லாமல் இதுபோல் போலீ ஏஜென்ட்கள் யாராவது செயல்படுகிறார்களாஎன்று கண்காணித்து வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார். பேட்டியன் போதுஅயலக தமிழர் நலத்துறையின் ஆணையர் ஜெசிந்தா லாசரஸ்உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



குவைத்தில் ரூ 60 ஆயிரம் சம்பளம் என்ற போலி அறிவிப்பை நம்பி சென்று சித்திரவதைக்கு ஆளான 19 தமிழர்களைதமிழக அரசு இந்திய தூதரகம் மூலம் மீட்பு. சென்னைக்கு வந்தவர்களை அமைச்சர் செஞ்சிமஸ்தான் வரவேற்று சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறை அபிராமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.எ., பேசினார் உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், ஏ.சி.என்.சிவபாலன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் பரமக்குடி ஏ.பி.சா. மஹாலில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தரராஜ் தலைமை தாங்கினார். இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். பரமக்குடி எம்.எல்.ஏ.செ.முருகேசன், வரவேற்று பேசினார். அதைத் தொடர்ந்து மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. பேசினார்.